**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.66/2022 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | சுந்தர் |
| த/பெ. | லட்சுமணன் |
| வயது | 48 |
| வசிப்பிடம் | எண்.428/2, வஉசி நகர், செங்கல்பட்டு |
| தொழில் | **பாத்திரக்கடை** |

**முதல் விசாரணை 22.10.2025**

நான் இந்த வழக்கில் 2ம் மனுதாரர். இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வளத்தி காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது 02.12.2020 தேதியிட்டு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1. மரண அறிக்கை நகல் ம.சா.ஆ.2. உடற்கூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.3. எதிர்மனுதாரரின் வாகன உரிமை சான்று நகல் ம.சா.ஆ.4. எதிர்மனுதாரரின் ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ.5. அருள்ராஜ் இறப்பு சான்று நகல் ம.சா.ஆ.6. அருள்ராஜ் வாரிசு சான்று நகல் ம.சா.ஆ.7. விபத்து ஏற்படுத்திய வாகனம் குறித்தும் வாகன காப்பீடு செய்யப்படாமல் சாலையில் இயக்கப்பட்டது குறித்தும், உரிய நடவடிக்கை எடுக்காதது குறித்தும் மனுதாரர் சார்பில் மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு 2005 தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்தது குறித்த நகல் ம.சா.ஆ.8. மனுதாரர் சார்பில் அனுப்பிய பதிவு தபாலை துணை காவல்கண்காணிப்பாளர் பெற்றுக் கொண்டதற்கிணங்க ஒப்புகை அட்டை நகல் ம.சா.ஆ.9. ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.10. முதல் மனுதாரரான வேல்கனியின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.11. முதல் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் ம.சா.ஆ.12. 2வது மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் ம.சா.ஆ.13.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.